**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 74/2020 |
| Name | : Pathampriya |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**10.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிங்க்பெண் சிறப்புப் படையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.12.2019 ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நடராஜன் என்பவர் எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண் 294/2019 இதச பிரிவு 381 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.12.2019 ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவிக்குமார் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் சாட்சி நடராஜன், முத்துக்குமரன், அனந்தமனோகரன் மற்றும் பார்வை

மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் நிலையம் வந்து இவ்வழக்கின் எதிரியை கைது செய்து அவரது மனைவிக்கு தகவல் கொடுத்து நீதிமன்றத்தில் காவலுக்கு ஒப்படைத்தேன். அன்றயை தினம் 20.00 மணிக்கு சாட்சிகள் நடராஜன் மற்றும் முத்துக்குமரன் ஆகியோர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட L வடிவிலான தாமிர பிளேட்கள் –12 (6 சிறியது மற்றும் 6 பெரியது) படிவம் 91ல் கைப்பற்றினேன். **படிவம் 91 அ.சா.ஆ.7 குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 02.02.2020ம் தேதி இதச பிரிவு 381 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகார்தாரர் அமராவதி அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மேலாளராக பணிபுரிந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதைப் பற்றி விசாரித்தேன். அவர் தான் மேலாளர் என்று தெரிந்தது. 13.12.2019 முதல் 19.12.2019 வரை புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காணாமல் போனதாக சொல்லப்பட்ட பட்டை அமராவதி மில்லிற்கு வெளியே கொண்டு செல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக புகார் கொடுக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 1 மணி நேரம் ஆகும். நான் இணையத்தில் பதிவு செய்தேனா என்றால் இல்லை. புகாரை அ.சா.1 வரும்போதே எழுதிக் கொண்டு வந்தார். அவருடன் முத்துக்குமார் மற்றும் ஆனந்த ஆகியோர் வந்தார்கள்.

(2) அந்த பட்டைகள் வாங்கியதற்கான ரசீதோ அல்லது அரசு நிறுவனமான சர்க்கரை மில்லில் அதை பெற்றுக்கொண்டதற்கான பதிவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஒவ்வொரு பட்டையும் எவ்வளவு எடை என்பதை அளந்து அதற்குண்டான ரசீது எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதற்குண்டான விலை மதிப்பை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக நான் விசாரணை செய்யவில்லை.

(3) எதிரியை சுற்றி வளைத்து பிடித்ததாக சொல்லும் நபர்கள் யார் என்று

விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புகாரில் சிறிய பட்டை, பெரிய பட்டை என்று தனியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு சம்பவ இடத்திற்கு இரவு 07.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று பார்வை மகஜரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரை நான் கைப்பட எழுதினேன். பார்வை மகஜர் எழுதப்பட்ட பேனா மையும், கையொப்பம் போட்ட மையும் வேறு, வேறாக உள்ளது என்றால் சரியல்ல.

(4) முத்துக்குமரன், அனந்த மனோகரன், ரவிக்குமார், ஆறுமுகம் ஆகியோர் அ.சா.1 வேலை செய்யும் நிறுவனத்தில் அவரது கட்டுப்பாட்டின் கீழ் வேலை செய்பவர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி போக மேலும் 4–5 அவருடன் வேலை செய்யும் நபர்கள் அ.சா.1 உடன் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்ற போது வேறு சாட்சிகளை விசாரித்தேன் அவர்கள் ஒரே மாதிரி சொன்னதால் பதிவு செய்யவில்லை. மில்லில் முன்னால் இரண்டு செக்யூரிட்டி இருந்து பரிசோதித்து அனுப்புவார்கள் என்றால் சரிதான். சர்க்கரை ஆலையில் கண்காணிப்பு கேமராக்கள் அனைத்து பகுதியிலும் இருக்கும் என்றால் சம்பவம் நடந்த பகுதியில் இல்லை. குறிப்பிட்ட சிப்டில், குறிப்பிட்ட நேரத்தில் அவர் பட்டைகளை கழட்டியதாக எந்த சாட்சியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டைகளை கழட்டும் போது மின் தடை ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

(5)சம்பவ இடத்தில் மொத்தம் எத்தனை பட்டைகள் இருந்தது அதில் எத்தனை பட்டைகள் கழட்டப்பட்டன என்று குறிப்பிட்டு வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டபடி எந்த குற்றச் சம்பவமும் நடைபெறவில்லை என்றும், வேறு சிப்டில் காணாமல் போன பட்டைகளை கொண்டு எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் எதிரி எந்த சிப்டில் வேலை செய்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தான் தப்பிக்க வேண்டி அவருடன் வேலை செய்யும் நபர்களை கெண்டு கையில் வைத்துள்ள பொருளைக்கொண்டு கொடுத்த பொய்யான புகாரில் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளிடம் சுமார் 19.30 மணிக்கு

வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சி 2 , 3 மற்றும் 4 ஆகியோரை சுமார் ¼ மணி நேரம் விசாரித்திருப்பேன். எதிரிக்கும் இந்த குற்றச்சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.10 18:08:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்